பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# உலகின் மிகப்பெரிய நாணயத்தை அச்சிட்ட ஹங்கேரி






உலகில் மோசமான பணவீக்கத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்றால், உடன் உங்களுக்கு ஜெர்மனி தான் ஞாபகத்துக்கு வரும். முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனியில் பணவீக்கம் உலகப் பிரபலமானது. 1920இல் அந்நாட்டு பணம் ஒன்றின் மதிப்பு விறகுத் துண்டை விடவும் சரிந்தது.

ஆனால் 1946 இல் ஹங்கேரி, 1992-1993இல் யுகோஸ்லாவிய மற்றும் 2004 தொடக்கம் 2009 வரை சிம்பாப்வேயின் பணவீக்கம் ஜெர்மனியை விடவும் மோசமானது. குறிப்பாக சிம்பாப்வே டொலர் தெரு நாயை விடக் கேவலப்பட்டது. ஒரு கட்டத்தில் 100,000,000,000,000 நாணயத்தை அச்சடிக்க வேண்டி ஏற்பட்டது.

இது எல்லாவற்றையும் விட ஹங்கேரியின் மிகைப்பணவீக்கம் படுபயங்கரமானது. முதலாம் உலகப் போரில் அஸ்ட்ரோ ஹங்கேரி பேரரசு தோற்கும் பக்கத்தில் இருந்தது. எனவே போருக்குப் பின் அந்தப் பேரரசு வீழ்ந்தது. புதிதாக பிறந்த ஹங்கேரி தேசத்தில் முறையான அரச கட்டமைப்பு இருக்கவில்லை. பட்ஜட் போடுவதற்கு கண்மண் தெரியாமல் பணத்தை அச்சடித்தது.

ஹங்கேரி நாணயத்தின் பெயர் குரோனன். அது முதலாம் உலகப் போருக்கு முன் ஒரு அமெரிக்க டொலருக்கு 5 அளவில் உறுதியாகவே இருந்தது. ஆனால் 1924 இல் அது 70,000 குரோனன் ஆக ரொக்கெட்டில் பறந்தது. தாங்கமுடியாதபோது குரோனன் என்ற நாணய முறையை மாற்றி பென்கோ என்ற நாணயத்தை அறிமுகம் செய்தது. அதாவது ஒரு குரோனனுக்கு 12,500 பென்கோ என்ற மதிப்பிலேயே புதிய பணம் அச்சடிக்கப்பட்டது.

ஆனால் இரண்டாம் உலகப் போர் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது. அந்த நாடு ரஷ்யா மற்றும் ஜெர்மனியின் போர்க்களமாக பெரும் அழிவை சந்தித்தது. பாதி அளவான ஹங்கேரி தொழிற்துறைகள் அழிந்ததோடு 90 வீதமானவை பாதிப்புக்கு உள்ளானது.

போருக்குப் பின் ஹங்கேரியில் உற்பத்திகள் வீழ்ந்ததால் விலை அதிகரிப்பு ஏற்பட வரி வருமானம் இல்லாதபோது அரசும் தன்னிஷ்டத்திற்கு பணத்தை அச்சடித்தது. பணம் மரத்தில் காய்க்கவில்லை என்றால் என்ன அச்சு இயந்திரங்களில் காய்க்க ஆரம்பித்தது.

பண வீக்கத்தை சொல்லவும் வேண்டுமா? பண வீக்கம் உச்சம் பெற்றபோது விலைகள் நாளைக்கு 150,000 வீதம் என்ற வகையில் அதிகரிக்க ஆரம்பித்தது. அதாவது காலையில் இருக்கும் பணத்தின் மதிப்பு அன்று மாலையாகும்போது பாதியாக குறையும் அளவுக்கு நிலைமை படுமோசமானது. பணத்தின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்வதால் அரசு வரி அறவிடுவதும் அர்த்தமற்றதாகிவிட்டது.

1946 ஜுலை மாதம் ஆகும்போது அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான பென்கோ நாணயத்தின் மதிப்பு 460 டிரில்லியன் டிரில்லியனாக உச்சம் தொட்டது. உண்மையில் இந்த டிரில்லியன் கணக்குக்கு எத்தனை பூஜ்ஜியங்கள் இருக்கும் என்று கணக்குப் பார்க்கப்போனால் தலை சுற்றும். அதனை வைத்து பணம் அச்சிடப்போனால் பூஜ்ஜியம் போடவே இடம் இல்லாமல் போய்விடும்.

என்றாலும் உலகில் மிகப்பெரிய இலக்கத்தில் பணம் அச்சடித்த நாடு என்ற உலக சாதனையை ஹங்கேரியிடம் இருந்து இன்று வரை எந்த நாடும் பறித்துக்கொள்ளவில்லை. 1946 ஆம் ஆண்டு ஹங்கேரி அச்சிட்ட நாணயத்தின் பெறுமதி 100 மில்லியன் பி பென்கோ. இலக்கமாக குறிப்பிடுவதென்றால் 100,000,000,000,000,000,000. இதனை இலக்கமாக போடுவதற்கு நாணயத் தாளில் இடம் இல்லை என்பதால் எழுத்திலேயே மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்தது.

நாணயத்தின் மதிப்பு என்பதற்கு உண்மையில் அந்த நாணயம் மதிப்பே இல்லை. அமெரிக்க டொலருடன் ஒப்பிட்டால் 0.20 டொலர்கள் மாத்திரமே.

நிலைமையை கட்டுப்படுத்த பல உத்திகள் கையாளப்பட்டபோதும் எதுவும் வெற்றி தருவதாக இல்லை. கடைசியில் நாணயத்தின் பெயரை மாற்றி மாற்றி வைத்தார்கள். முதலில் பென்கோ, மில்பென்கோவானது, பின்னர் பில்பென்கோவாக மாற்றப்பட்ட, அதுவும் வெற்றி தராதபோது அடோபென்கோவாக அறிமுகம் செய்யப்பட்டது.

இப்படி அடிக்கடி பெயர் மாற்றியபோதும் நாணயத் தாள் ஒரே வடிவில்தான் இருந்தது. ஆனால் நிறம் மாத்திரம் மாற்றப்பட்டது.

நிலைமைய கட்டுப்படுத்த அரசு பின்னர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. வரி சீர்திருத்தம், வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட தங்க சொத்துகளை மீட்பது போன்றவை இதில் அடங்கும்.

இறுதியாக 1946 ஓகஸ்டில் போரிண்ட் என்ற புதிய நாணயம் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு பின் நிலைமை சற்று ஸ்திரம் அடைய ஆரம்பித்தது. 1960கள் ஆகும்போதும் விலை ஒப்பீட்டளவில் உறுதியானது. பின்னர் வழக்கத்துக்கு திரும்பியது. இன்று வரை ஹங்கேரி போரிண்ட் நாணயத்தையே பயன்படுத்துகிறது.



## போலி நாணயக் குற்றிகளை உருவாக்கிய கில்லாடி

போலி நாணயத்தாள்கள் அச்சிடுவது உலகெங்கும் நடக்கும் காரியம். ஆனால், பிரிட்டனைச் சேர்ந்த கிளின்டன் அதிலும் ஒரு தந்திரம் செய்தார். ஒரு பவுண்ட் பெறுமதியான போலி நாயணக் குற்றிகளை தயாரித்தார்.

போலி நாணயத் தாள்கள் என்றால் கண்டுபிடிப்பது இலகுவானது. அதற்கென்று தனி இயந்திரமே இருக்கிறது. போலி நாணயக் குற்றிகள், அதுவும் வெறுமனே 1 பவுண்ட் பெறுமதி கொண்ட நாணயக் குற்றிகளை யாரும் பொருட்படுத்தப்போவதில்லை.

இதனால் கிளின்டன் தன்னிஷ்டத்திற்கு தயாரித்தார். ஏழு ஆண்டுகளில் அவர் இவ்வாறு 14 மில்லியன் போலி நாணயக் குற்றிகளை தயாரித்திருக்கிறார்.

ஒருநாள் அவரது தொழிற்சாலையை சோதனையிட்டபோது கிளின்டன் கையும்மெய்யுமாக பிடிபட்டார்.

